இருக்கின்றன. இந்தச் சூழ்நிலைகளின் காரணமாக, மருத்துவத் துறையையும் காவல் துறையையும் கலந்து ஆலோசிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவை முடிந்த பிறகு அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

மூடப்பட்டுள்ள 'பவானி பஞ்சாலை'யைத் திறத்தல்.

*2063 திரு. ஆ. நடராசன் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவையில் சுந்திராபுரம் பகுதியில் மூடப்பட்டுள்ள 'பவானி பஞ்சாலை'யைத் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதா?

(ஆ) அந்த ஆலையை அரசே ஏற்று நடத்துமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசு இந்த ஆலை நிர்வாகத்தை எடுத்துக் கொள்ள தேவையான முயற்சிகளை எடுத்தது. இருப்பினும் இவ்வாலை தொழிலியல் மற்றும் நிதியியல் மறு சீரமைப்பு வாரியத்தின் முன்னால் நிலுவையில் உள்ளது. அதன் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலையிலே 700 தொழிலாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். அங்கே பணியாற்றும் 25 இலங்கை அகதிகளுக்காக முன்பிருந்த அரசாங்கம் இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறது. எனவே, அரசாங்கமே இந்த ஆலையை எடுத்து நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலையை எடுத்து நடத்துவதற்காக முயற்சி செய்தபோது மத்திய அரசு அனுமதி அளிக்க மறுத்து விட்டது. ஆனால் இப்போது இந்த ஆலையினுடைய உரிமையாளரே அதைத் திறப்பதற்காகத் தீவிர முயற்சி எடுத்துக்கொண்டு, இப்போது பி. ஐ. எஃப். ஆர்.-ல் பெண்டிங்காக இருக்கிறது. எவ்வளவு விரைவாக அதைத் தீர்த்து அதைத் திறக்க முடியுமோ அவ்வளவு விரைவாகத் திறப்போம் என்று

சொல்லி, நேற்று முன்தினம் இங்கே அவர்கள் வருகை தந்து அரசு அதிகாரிகளையெல்லாம் சந்தித்துச் சென்று இருக்கிறார்கள். விரைவாக அதைத் திறப்பதற்கு அரசு முடிந்த உதவிகளைச் செய்யும்.

திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலை நிர்வாகம் ஏற்கனவே இந்த ஆலையைத் திறப்பதாகச் சொல்லி அங்கேயிருந்த நிலங்களையெல்லாம் விற்பனை செய்து விட்டது. அந்த ஆலைக்குச் சொந்தமான நிலங்களை மேலும் விற்காமல் இருப்பதற்கு அரசு தடை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது, தொழிலாளர் ஆணையர் முன்பு போடப்பட்டிருக்கின்ற ஒப்பந்தத்தில் அந்த ஆலையினுடைய நிலங்களையெல்லாம் விற்கக் கூடாது என்றுதான் போடப்பட்டிருக்கிறது.

கலைஞர்கள் தினம் கொண்டாடுதல்

*10291 திரு. டி. கே. பழனிச்சாமி:

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

குழந்தைகள் தினம், ஆசிரியர்கள் தினங்கள் போன்று மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் மாதம் 3ம் தேதியை கலைஞர்கள் தினமாகக் கொண்டாட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. டி. கே. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது முத்தமிழ் அறிஞர், ஒப்பற்ற தலைவர், டாக்டர் கலைஞர் அவர்களுடைய பிறந்த நாள் விழா ஜூன் மாதம் 3ஆம் தேதி வருகிறது. உலகத்திலே இருக்கக்கூடிய அனைத்துத் தமிழர்களும் அந்த விழாவை தேசிய விழாவாக நடத்தி வருகிறார்கள். அதேபோல, இந்தியாவிலே வாழ்கின்ற இந்திய மக்களும், இந்திய தேசியத் தலைவர்களில் ஒருவராக விளங்கி வருகிற தானைத் தலைவர், அண்ணன் கலைஞர் அவர்களுக்கு, விழா எடுத்து நடத்தி வருகிறார்கள். எத்தனையோ தலைவர்களுக்கு ஆசிரியர் தினம், குழந்தைகள் தினம் என்று கொண்டாடப்படுகிறது. . . .